

திருவள்ளூர் மாவட்டம், திருவேற்காடு நகராட்சி, சுந்தரசோழபுரம் பகுதியில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துக்கொள்ள உள்ள நிகழ்ச்சிக்கான இடத்தில் மேற்கொள்ள வேண்டிய முன்னேற்பாடு பணிகள் தொடர்பாக சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் நேரில் ஆய்வு மேற்கொண்டு துரித நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப், ஆவடி மேயர் கு.உதயகுமார், மாநகராட்சி ஆணையர் ரா.சரண்யா, நகர்மன்ற தலைவர் என்.இ.கே.மூர்த்தி , நகராட்சி ஆணையர் ராமர், ஆவடி வட்டாட்சியர் கண்ணன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.

அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேற்று (07.11.2025) சென்னையில், கலை பண்பாட்டுத் துறையின் சார்பில் தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரி நடத்தும் ”தமிழிசை விழா 2025–2026 நிறைவு விழாவில் கலந்து கொண்டு விழாப் பேருரையாற்றினார். இவ்விழாவில், சட்டமன்ற உறுப்பினர் த.வேலு, கலை பண்பாட்டுத் துறை இயக்குநர் சமூக நலன் மற்றும் பெண்கள் முன்னேற்றும் துறை அரசு கூடுதல் செயலாளர் உவளர்மதி, தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரி முதல்வர் (பொ) முனையர் ஏ.வி. எஸ்.சிவக்குமார், தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரி குரலிசைப் பேராசிரியர் தோப்பூர் முனைவர் பா. சாய்ராம் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.




## திருவொற்றியூர் கிழக்கு பகுதி சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர்

# பி.ராகுல்குமார் - ஜி.சாய்சுமாஸ்ரீ திருமண வரவேற்பு விழா!

### தி.மு.தனியரசு வரவேற்புரை! மாதவரம் எஸ்.சுதர்சனம் தலைமை! கலாநிதி வீராசாமி - கே.பி.சங்கர் வாழ்த்துரை!

சென்னை நவ.8-

சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் கிழக்கு பகுதி சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் மணமகன் பி.ராகுல் குமார் மணமகள் ஜி.சாய்சுமார் ஆகியோரின் திருமண வரவேற்பு விழா இன்று (8.11.2025 - சனிக்கிழமை) மாலை 7.00 மணிக்கு டி.கே.பி. திருமண மாளிகையில் நடைபெறுகிறது.

விழாவிற்கு பகுதி செயலாளரும் 1வது மண்டல குழு தலைவருமான தி.மு. தனியரசு வரவேற்புரை ஆற்றுகிறார். சென்னை கிழக்கு மாவட்ட அவைத் தலைவர் குறிஞ்சி எஸ். கணேசன், ஆர்.சி.ஆசைதம்பி, எஸ்.தமிழ்செல்வன், எம்.வி.குமார், கே.பிரபாவதி, ஆர்.குமரேசன், த.கார்த்திகேயன், டி.சி.வி.மணிகண்டன், எம்.எல்.சரவணன், குருத்து சி.முனுசாமி, க.வீ.சதிஷ்குமார், கேபிள் டிவி எம்.ராஜா, ஆர்.சந்தர், ஏகா.கார்த்திகேயன், எஸ்.பாஸ்கர், ஆர்.ரஜினிபாபு, ஒய்.ரஜினிநந்தி, பி.எஸ்.சைலஸ், ஆர்.டில்லி, வி.பழனிவேல், டி.டி.எம்.பாபு, ம.ஜெயராமன், கே.கார்த்திகேயன், ம.எத்திராஜ், அ.அப்துல் சலிம், ப.சந்தாணகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இத்திருமண விழாவிற்கு சென்னை வடகிழக்கு மாவட்டக் கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார்.



இவ்விழாவில் வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர், கழக அயலக அணித் தலைவர் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர், மாநில மீனவர் அணி துணைத் தலைவர் கே.பி.சங்கர், திருவொற்றியூர் தொகுதி பார்வையாளர், மாநில வர்த்தகர் அணி துணைத் தலைவர் தியாகராயர் நகர் எஸ்.மோகன் ஆகியோர் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தி உரையாற்றுகின்றனர். மேலும் இவ்விழாவில் வீ.கண்ணதாசன், ஆர்.பத்மநாபன், வீ.கவி கணேசன், ஜி.சந்திரபோஸ் டி.சி.வி.ராஜகுமாரி, உமா சரவணன், சரண்யா கலைவாணன், சூசிலா ராஜா, பானுமதி சந்தர், எம்.எம்.செந்தில், எம்.கோமலவள்ளி, கு.தமிழ்மணி, டி.தேவநேசன், மற்றும் மாநில, மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக மூத்த முன்னோடிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

# முதல்வரின் நற்பண்புகள்!



என் உயிரினும் மேலான தமிழ் சொந்தங்களே!... தமிழன்னை அகமகிழ்ந்தாள். சிந்தனைக் கூர்மை இவரிடம் சிறப்பு பெற்றிருக்கிறது. கற்பனைக் குதிரை இவரது கடிவாளப் பிடியில் கனிவு பெற்றுள்ளது. அதிகம் பேசாத இவரின் மௌனம் கூட மெத்தப் படித்தவர்களால் பெரிதும் மெச்சப்படுகிறது.

இவரது பேச்சிலே அடுக்கு மொழியில்லை.... கிடுக்குப்பிடி இல்லை... மிடுக்குநடை இல்லை... துடுக்குத் துணுக்குகள் இல்லை... கடுப்படிக்கும் குட்டிக்கதைகள் இல்லை... தடுப்பணைகள் இல்லவே இல்லை! நேராக விஷயத்தைச் சொல்லும் சீரான பேச்சு. எதிரே அமர்ந்திருப்பவர்கள் ஏதும் அறியாதவர்கள் என எண்ணி மைக்குமுன்னால் மைக்கேல்ஜாக்சன் ஆவதும் இல்லை.

இப்போதெல்லாம் கைதேர்ந்த அரசியல் விமர்சகர்களால் கூட இவரின் உயரத்தை எடைபோட முடிவதில்லை.... ஊற்றுநீரைபோல் களங்கமற்ற செயல்கள்... காற்றைப்போல எல்லா மக்களுக்கும் சுவாசமாகத் திகழ்கிறார். ஆற்று வெள்ளம் போல் எப்போதும் முன்னோக்கியே பாய்கிறார். நான் என்று மார்தட்டுவதுமில்லை... முடியுமா என்று மற்றவர்களிடம் அபிப்பிராயம் கேட்டு காலம் தாழ்த்துவதும் இல்லை.

எல்லாத்தரப்பு மக்களைப்பற்றியும் சிந்தித்து செயலாற்றுகிறார். தமிழ்நாட்டை தலைகுனியவிடமாட்டேன் என்று உறுதியாகச் சொல்லும் இவர்... இந்தியநாட்டின் ஜனநாயகம் காக்கப்போகும் அடுத்த இரும்பு மனிதர் இவர்தான். இவரது திராவிட மாடல் அஸ்திரம் தான்.... துருப்பிடித்துப் போயிருக்கும் சனாதன சன்மார்க்க அரசியலை புதைகுழிக்குள் தள்ளப் போகிறது..

நமது முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் நகைச்சுவை கேட்டால் நன்றாக சிரிப்பார். புதிய கருத்துக்களை கேட்டால் ஆழமாக சிந்திப்பார். யாராவது அவரைப் புகழ்ந்தால் இவர் முகத்தில் எந்த சலனமும் இருக்காது. நமது கலைஞர் கூட நண்பர் ஜெகத்ரட்சகன் பேசுவதை கேட்டால் சிரிப்பார். அவர் புகழ்ந்து பேசுவதை ரசித்து மகிழ்வார்.

இன்றைய முதல்வரை புகழ்வதையே பொழப்பாக்கிக்கிட்ட சில பேர் உண்டு. இவர்கள் வாய் வலித்து... வார்த்தைகள் கிடைக்காமல் ஓய்ந்து ஓடிப் போகும் வரை இவர் முகத்திலே எந்தரியாக்‌ஷனும் இருக்காது. நமது முதல்வரிடம் இருக்கும் நற்பண்புகளில் இதுவும் ஒன்று.



**வி.சி.குகநாதன்**
திரைப்பட இயக்குநர்

# மயிலை மேற்கு பகுதி கழக ஆலோசனை கூட்டம்!

### பகுதிச் செயலாளர் நந்தனம் கி.மதி எம்.சி. அறிக்கை!

சென்னை, நவ. 8-

சென்னை தென் மேற்கு மாவட்டம், மயிலை மேற்கு பகுதி கழக ஆலோசனை கூட்டம் சென்னை தென் மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. ஆலோசனைபடி பகுதி அவைத் தலைவர் ஜி.ஆர்.ராஜேந்திரன் தலைமையில் பகுதி துணைச் செயலாளர்கள் ஆர்.எல்.வி.அசோக்குமார், பா பாக்கியதாஸ், அகல்யா விஸ்வநாதன், பகுதி பொருளாளர் ஜி முருகையன் முன்னிலையில் இன்று (08/11/2025 - சனிக்கிழமை) மாலை 6:00 மணியளவில் சி.பி.ராமசாமி சாலையில் உள்ள மயிலாப்பூர் சட்டமன்ற வளாகத்தில் நடைபெறுகிறது.

இதில் வட்ட கழக செயலாளர்கள் டி ராஜவேலு , சீ.கிருஷ்ணமூர்த்தி, எஸ் ஆர் ராஜா சுரேஷ்குமார், ஆ நாகராஜன், மூ.இ. ஏழுமலை, மூ.இராஜேந்திரன் மற்றும் பகுதி அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: நவம்பர் 11 அன்று நடைபெறும் ‘சிறப்பு வாக்காளர் பட்டியல் திருத்தத்தை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம்’ மற்றும் கழக ஆக்க பணிகள்.

இவ்வாறு மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் கி.மதி எம்.சி. அறிக்கை விடுத்துள்ளார்.

## எஸ்.முனுசாமி தலைமையில்

# மயிலை கிழக்கு பகுதி வட்டச் செயலாளர்கள் - கழக நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம்!

### பகுதி கழகச் செயலாளர் எஸ்.முரளி அறிக்கை!

சென்னை, நவ. 8-

மாவட்டக் கழகச் செயலாளர் மயிலை த. வேலு, எம்.எல்.ஏ. ஆலோசனைப்படி பகுதி அவைத் தலைவர் எஸ். முனுசாமி தலைமையில், சீமன் சேகர், பி. எல்.தாஸ், எ.குமாரி, எல். உதயகுமார் ஆகியோர் முன்னிலையில் மயிலை கிழக்கு பகுதி வட்டச் செயலாளர்கள் கழக நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் இன்று (08.11.2025 - சனிக்கிழமை) மாலை 7 மணியளவில் மயிலை கிழக்கு பகுதி கழக அலுவலகத்தில் நடைபெறுகிறது.

இதில் வட்டக் கழகச் செயலாளர்கள் ஏ.தாஸ், மா.பா. அன்பு. அ. தவனேசன், வெ. வெற்றிவேல், கோ. கண்ணன், துரை பார்த்திபன், பா. பொன்னுசாமி, மற்றும் பகுதி அணிகளின் அமைப்பாளர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: நவம்பர் 11 அன்று SIR கண்டித்து ஆர்ப்பாட்டம் மற்றும் கழக ஆக்க பணிகள்

இவ்வாறு மயிலை கிழக்கு பகுதி கழகச் செயலாளர் எஸ். முரளி அறிக்கை விடுத்துள்ளார்.

# பஹ்ரைன், அயலக தமிழ் இந்தியர் சங்கம் (NRTIA) சார்பில் முப்பெரும் விழா!

பஹ்ரைன், நவ. 7 -

பஹ்ரைன், அயலக தமிழ் இந்தியர் சங்கம் (NRTIA) சார்பில், நமது கழகத்தின் திருவிழாவான முப்பெரும் விழா 31.10.2025 அன்று பஹ்ரைன் மனாமா நகரில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

விழாவை துணை அமைப்பாளர் கபீர் அகமது ஒருங்கிணைக்க, பொது செயலாளர் இஸ்மாயில் வரவேற்புரையுடன், துணை அமைப்பாளர்கள் கருணாநிதி சண்முகம், வேம்புராஜ், சுல்தான் இப்ராஹிம், திருமேனி, சதீஷ் குமார், மன்னை முபாரக், லலித்குமார், அவை தலைவர் முபாரக், ஆலோசனை குழு தலைவர் பாபு, துணை தலைவர் மணிவண்ணன் சந்திரன், துணை செயலர்கள் பிரபா, ஆபீத் அலி, பொருளாளர் அசோக், துணை பொருளாளர் பவுல் டேவிட் மூத்த உறுப்பினர் நாஞ்சில் பசீர் ஆகியோர் முன்னிலை வகிக்க விழா சிறப்பாக தொடங்கியது.

அமைப்பாளர் முஹமது ஹுசைன் மாலிம் தலைமை உரையாற்றி, NRTIA பஹ்ரைன் செயல்பாடுகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார்.

நிகழ்வில் சிறப்பு அழைப்பாளர்களாக தாயகத்திலிருந்து அயலக அணி செயலாளர், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் M.M.அப்துல்லா மற்றும் அயலக அணி துணை செயலாளர், பெருநகர சென்னை 99வது வார்டு உறுப்பினர் பரிதி இளம் சுருதி கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினர்.

அவர்களின் உரைகளில், எனது வாக்குசாவடி - வெற்றி வாக்குசாவடி, மாநில முன்னேற்றம் உள்ளிட்ட முக்கியமான தலைப்புகள் குறித்து பேசினர். மேலும், பஹ்ரைன் அயலக அணியின் சிறப்பான செயல்பாடுகளை பாராட்டினர்.

அணி செயலாளர் எம்.எம்.அப்துல்லா கழக முன்னோடிகளான எஸ்.டி.பால்ராஜ் அவர்களுக்கு தந்தை பெரியார் விருதும், அப்துல் கபூர் அவர்களுக்கு அறிஞர் அண்ணா விருதும், மொய்தீன் அவர்களுக்கு கலைஞர் கருணாநிதி விருதும், செயல் வீரர்களுக்கான தளபதி மு.க.ஸ்டாலின் விருது பவுல் டேவிட் அவர்களுக்கும் வழங்கி கௌரவித்தார்.

அதனைத் தொடர்ந்து பஹ்ரைன் NRTIA நிர்வாகிகள தங்களது உரைகளில் கழகத்தின் வளர்ச்சி, நோக்கம், மற்றும் பஹ்ரைனில் தங்களது சமூகச் சேவைகள் குறித்து எடுத்துரைத்தனர்.

இந்த விழாவில் சவூதி கிழக்கு மண்டல NRTIA அமைப்பாளர் சிக்கந்தர் பாபு, மத்திய மண்டல அமைப்பாளர் சந்தோஷ் வின்பிரட் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினர். கிழக்கு மண்டல துணை அமைப்பாளர்கள் திருச்சி பிலால், முகம்மது ஜியாவுல் ஹக், சவுதி சமுதாய செயல்பாட்டாளர் வெங்கடேஷ் ஆகியோர் பங்குப் பெற்று சிறப்பித்தனர்.

விழாவில் இந்தியன் பள்ளி நிர்வாகிகள், பாரதி தமிழ் சங்க நிர்வாகிகள், மற்றும் பல்வேறு அமைப்புகளின் நிர்வாகிகள் சவுதி செயல்பாட்டாளர்கள் கலந்துகொண்டு விழாவை சிறப்பித்தனர்.



சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட ஸ்மார்ட் சிட்டி பகுதிகளில் நடைபெறும் பணிகள் குறித்து, இராயபுரம் சட்டமன்ற அலுவலகத்தில், சென்னை பெருநகர மாநகராட்சி, கழிவுநீர் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, மின்வாரியத் துறை ஆகியவற்றின் அதிகாரிகளுடன், இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா. மூர்த்தி கலந்தாலோசனை மேற்கொண்டார். மேலும் ஸ்மார்ட் சிட்டி பணிகள் மற்றும் அவற்றின் முன்னேற்ற நிலை குறித்து கேட்டறிந்து கொண்டு, பணிகள் நடைபெறும் இடங்களில் ஏதேனும் குறைகள் அல்லது தாமதங்கள் இருப்பின் அவற்றை உடனடியாக சரிசெய்து, அனைத்து துறை அதிகாரிகளும் ஒன்றிணைந்து, பொதுமக்கள் நலனைக் கருத்தில் கொண்டு, பணிகளை விரைவில் நிறைவு செய்யுமாறு வலியுறுத்தினார்.

